கர்நாடக

# இசை விளக்கம்

முதலாம் பாகம்




மாணவர்
வழி நூல்

தர்மவதி வெளியீடு
37/10 மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

தணிமாரிக்கு ஜெயைக்கு அன்பளிப்பு -

- சி. இளங்கோவன்.
குரும்பசிட்டி

கர்நாடக

# இசை விளக்கம்

## முதலாம் பாகம்

## மாணவர் வழி நூல்


ஆசிரியர்

செல்லப்பா சிவபாதசுந்தரம்
சங்கீதபூஷணம்



தர்மவதி வெளியீடு
37/10 மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

முதற் பதிப்பு 1977 ஆடி
இரண்டாம் பதிப்பு 1979 மாசி
மூன்றும் பதிப்பு 1987 வைகாசி

வட இலங்கை சங்கீத சபையின் 1 ஆம் 2ஆம் பகுதிகளின் பாடத்திட்டத்திற்கு அமைவுற இந் நூல் ஆக்கப்பட்டுள்ளது. அத்துடன் கல்விப் பகுதியினரின் 6, 7, 8, 9 ஆம் வகுப்புகளுக்கும், கல்விப் பொதுத் தராதர வகுப்பிற்கும் உரியதாகத் திருத்திய முறையில் விளக்கத்தோடு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலை வெளியிடும் உரிமை
செல்வி தர்மவதி சிவபாதசுந்தரம் அவர்கட்கே உரியது.

விலை: ரூபா

# எண்ணம்

இசைக் கலையைக் கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கும், கற்பித்துக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் வழிகாட்டியாய் அமையக்கூடிய மாதிரி அடக்க மானதோர் கை நூல் வேண்டுமென எண்ணியிருந்தேன். அவ்வெண்ணத்தின் வளர்ச்சியே இம் மூன்றாம் பதிப்பாகும்.

கடதாசியின் விலை ஏற்றத்தினாலும் அச்சுச்செலவு அதிகரித்ததாலும் புத்தகத் தின் விலை சிறிது கூட்டப்பட்டுள்ளது. இதையிட்டு வருந்துகின்றேன். ஆசிரியர்களின தும், மாணவர்களினதும் அன்பிற்கும் ஆதரவிற்கும் எனது நன்றிகள்,

இசை விளக்கம் என்ற இந் நூலை வெளியிட ஊக்கமும் ஆக்கமும் தந்த வித்து வான் புலவர் ஆனந்தராயர் வேல்மாறன் அவர்கட்கும், மதிப்புரை அளித்த அண்ணா மலை இசைத் தமிழ்மன்றச் செயலாளர் சங்கீத பூஷணம் ச. பாலசிங்கம் அவர்கட்கும் நன்றியைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பதிப்பை சிறந்த முறையில் அச்சியற்றித் தந்த நியூ ஏறா பப்ளிக்கேசன் லிமிட்டட்டுக்கு எனது நன்றிகள்.

செ. சிவபாதசுந்தரம்
ஆசிரியர்

## கர்நாடக இசை விளக்கம்

### மூன்றும் பதிப்பு

1977 ஆம் ஆண்டு ஆடி மாதம் வெளிவந்த கர்நாடக இசைவிளக்கம் முதலாம் பாகம் ஓராண்டு காலத்துள் சிலருடைய மூச்சான எதிர்ப்புகளுக்கு இலக்கானபோதிலும் பல அபிமானிகளின் ஆதரவோடு எண்ணூற்றி ஐம்பது பிரதிகளும் விற்பனையாகி விட்டன.

விற்பனைக்கு உதவிய ஆசிரிய நண்பர்களினதும் பல வியாபார நிலையங்களின் தும் வேண்டுகோளுக்கிணங்க இக்கட்டான பொருளாதார நெருக்கடிகளுக்கிடையில் இதை மூன்றும் முறையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளேன். மதிப்புரை அளித்தவர்களுக் கும், ஆக்கத்திற்கு ஊக்கம் தந்தவர்களுக்கும் இப்பதிப்பிலும் நன்றி கூறுகின்றேன்.

இப்படிக்கு
2-5-87 செ. சிவபாதசுந்தரம்

# மதிப்புரை

ச. பாலசிங்கம், சங்கீதபூஷணம்,
செயலாளர்,
அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்,
யாழ்ப்பாணம்.

317, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்,
6-7-77.

இலங்கை அரசாங்கம் ஆறும் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு வரையும் கற்பிக்கும் கலைப்பாடங்களுள் இசைப் பாடத்தையும் ஒன்ருகப் பாடத்திட்டத்தில் புகுத்தி யுள்ளது. இவ்வேளையில் சங்கீதபூஷணம் திரு. செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்களால் தொகுக்கப்பட்ட "கர்நாடக இசைவிளக்கம்", ஆறும் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்புவரை இசை கற்கும் மாணவர்கட்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமென்றே கூற வேண்டும்.

அன்றியும் வடஇலங்கை சங்கீத சபையினர் நடாத்தும் பரீட்சைக்கு, முதலாம் இரண்டாம் ஆண்டுப் பரீட்சார்த்திகட்கும், விசேடமாக இசை கற்கும் மாணவர் யாவர்க்கும் இந்நூல் ஒரு வழிகாட்டியாய் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்நூலைக் கைநூலாகக் கொண்டு கற்போரும், கற்பிப்போரும் பயன் பெறுவதன் மூலம் இவ்வாசிரியரின் ஆக்க முயற்சிக்கு ஊக்கம் அளிப்பதாகவும் அமையும்.

ஆசிரியருக்குக் கலைத்தாயின் பெயரால் எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக,

ச. பாலசிங்கம்

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அலங்காரங்கள் அ | 23 |
| 2. அலங்காரங்கள் (அம்புக்குறி) | 24 |
| 3. அலங்காரங்கள் ஆ | 34 |
| 4. அலங்காரங்களைப் பூர்த்தி செய்தல் | 26 |
| 5. அப்பியாசவரிசைகள் | 27 |
| 6. ஆரோகண அவரோகணம் | 32 |
| 7, இசைக் கலை | 1 |
| 8. இரட்டை வரிசைகள் | 14 |
| 9. இசைக்கலைச் சொற்கள் பகுதி 1 | 19 |
| 10. இசைக்கலைச் சொற்கள் பகுதி 2 | 31 |
| 11. இராகபேதம் | 27 |
| ஜன்னிய இராகம் | 28 |
| உபாங்க இராகம் | 30 |
| பாஷாங்க இராகம் | 30 |
| ஸ்வராந்த இராகம் | 30 |
| வக்கிரகம் | 31 |
| 12. இலக்கியப் பாடல்கள் | |
| சிவஞானபாதப் புகழ் | 33 |
| பாடுபட்டு (நாட்டுப் பாடல்) | 49 |
| முத்தொழிலாளி (தொழிற்கும்மி) | 55 |
| வள்ளுவர் தந்ததிருமறை (இலக்கியப் பாடல்) | 69 |
| கொழுங் கொடியின் (குறத்திப் பாடல்) | 70 |
| 13. எடுப்பு (கிரஹம்) | 14 |
| 14. ஒலி | 1 |
| ஒலி பரவுதல் | 2 |
| 15. கர்த்தா இராகம் | 18 |
| 16. காலம் | 8 |
| 17. கிறீஸ்தவ கீதங்கள் | |
| உலகெல்லாம்—கல்யாணி—ஆதி | 42 |
| உம்மதன் உடலை—இந்தோளம்—ரூபகம் | 43 |
| 18. கீதங்கள் | |
| எனையாள்—மோகனம்—ஆதி | 36 |
| வரவீணு—மோகனம்—ரூபகம் | 37 |
| சிவநெறியே—நாகஸ்வராளி—ரூபகம் | 38 |
| கணநாதா—மாயாமாளவகௌளை—ரூபகம் | 38 |
| பதம்தருவாய்—கல்யாணி—ஆதி | 39 |
| கருணைக்கடல்—நாட்டைக்குருஞ்சி—ஆதி | 40 |
| 19. குறியீடுகள் | 22 |
| 20, சுருதி | 3 |
| சுருதிப் பயிற்சி | 54 |

| | |
|---|---|
| 21. சுரங்கள் 7உம், ஸ்தானங்கள் 12உம் | 4 |
| 22. சுரவரிசைகள் பகுதி 1 | 5 |
| 23. சுரவரிசைகள் பகுதி 2 | 9 |
| 24. சுரவரிசைகள் பகுதி 3 | 11 |
| 25. சுரவரிசைகளின் அமைப்பு (எண்களில்) | 7 |
| 26. சுரவரிசைகள் (2ஆம் காலம்) | 10 |
| 27. சுரஜதி | |
| பன்னகசயனனே—காம்போதி—ஆதி | 50 |
| நீ அருளாயோ—பைரவி—ஆதி | 52 |
| ராவேமேமகு—ஆனந்தபைரவி—ஆதி | 56 |
| ஸாம்பசிவாயெனவே—கமாஸ்—ஆதி | 57 |
| 28. சூளாதி | |
| பெருமானினதிணை—பௌளி—சதுஸ்ர ஏகம் | 41 |
| 29. தாளம் | 12 |
| 30. தேவாரம் | |
| பிடியதனுரு உமை | 40 |
| சொற்றுணைவேதியன் | 41 |
| 31. திவ்விய நாமக்கீர்த்தனை | 23 |
| 32. திருப்புகழ் | |
| இருவினை | 71 |
| அற்றைக்கிரை தேடி | 72 |
| 33. தியாகராஜஸ்வாமிகள் வாழ்க்கை வரலாறு | 73 |
| 34. நாதம் | 3 |
| 35. நான் வளர்த்த வாழை (விளக்கம்) | 35 |
| 36. மேல்ஸ்தாயி வரிசைகள் | 17 |
| 37. யாழின் பரிணும வளர்ச்சி (படம்) | 88 |
| 38. லயம் | 8 |
| 39. வர்ணம் | 59 |
| ஆலிலை—மோகனம்—ஆதி | 60 |
| நின்னுகோ—மோகனம்—ஆதி | 62 |
| சாமி நின்னே—சங்கராபரணம்—ஆதி | 63 |
| நாதாநாவலர்—கேதாரகௌளை—ஆதி | 64 |
| அன்னமே—ஆரபி—ஆதி | 67 |
| 40. வாத்திய சங்கீதம் | 10 |
| 41. வினுக்கள் | 74 |
| 42. விடைகள் | 84 |
| 43. ஸ்தாயி | 16 |
| 44. ஸ்வரஸ்தானங்கள் 12உம், பெயர்கள் 16உம் | 44 |
| 45. ஜாதிகள் | 12 |
| 46. ஜதிஸ்வரம் | 45 |
| சா, ரி காபா—பிலகரி—ஆதி | 46 |
| ச்ாநீ தாபா—கேதாரகௌளை—ரூபகம் | 48 |
| ச்ா ; ;நீ—கல்யாணி—திஸ்ரஏகம் | 48 |

# இசைக்கலை

"ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.''

இப்பாடலில் இருந்து நம் முன்னோர் கலைகளை அறுபத்துநான்கெனப் பகுத்துள்ளனர் என அறிகின்றோம். கலைகளைச் சாதாரண கலைகளென்றும், நுண்கலைகளென்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றுள் சங்கீதம், நடனம், சித்திரம், சிற்பம் போன்றவை நுண்கலைகளுள் அடங்கும், இக்கலைகள் உள்ளத்தில் ஒருவகை உணர்வை உண்டுபண்ணி இன்பமளிக்க வல்லனவாகும்.

இக்கலைகளுள் இசைக்கலை மிக உன்னதமான உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது கேட்பவரின் உள்ளத்தை இசைவிப்பதால் இக்கலைக்கு இசைக்கலையெனப் பண்டையோர் பெயர் வைத்தமை சாலவும் பொருத்தமாகும். ஏனைய கலைகளைக் கற்றுணர்ந்த பெரியோரே கண்டும், கேட்டும் அனுபவிக்க முடியும். இசைக்கலை ஒன்றினையே கற்றோர், கல்லாதோர் என எவ்வித வேறுபாடுமின்றி அனுபவிக்க முடியும்.

மானிடரல்லாத பல உயிரினங்களும் பச்சிளம் பாலகர்களும் பாட்டின் பொருள் உணர்ந்து நயப்பதில்லை. பாடலின் ஒலி நயத்தைக் கேட்டே நயக்கின்றனர். மொழி எதுவாக இருந்தபோதிலும் அம்மொழியினரின் இசை கேட்டு நயக்க முடியும், இதற்கு எடுத்துக் காட்டாகத் தியாகராஜஸ்வாமிகளின் தெலுங்கு உருப்படிகள் யாவற்றையும் தமிழ், கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசும் தென்னிந்திய மக்கள் எல்லோரும் கேட்டு மகிழ்வெய்துகின்றனர். இருந்தும் இசை கற்கும் சிறுவர்களாகிய நாம் முதலில் சிறிய கீதம், நாட்டுப் பாடல், வர்ணம் ஆகிய பாடங்களைத் தமிழ்ப் பாடல்களாகக் கற்றுக் கொள்வது இலகுவாகவும், நன்மை தருவதாகவும் இருக்கும்.

## ஒலி

நம் வாழ்வில் அன்றாடம் பல வகையான ஒலிகளைக் கேட்கிறோம். அவற்றுள் சில கேட்பதற்கு இனிமையாகவும், சில கேட்பதற்கு இனிமை அற்றனவாகவும் உள்ளன. ஒலியின் நயம், நயமற்ற தன்மை, ஒலி எழுங்காரணம், அவை பரவும் வகை ஆகியவற்றைச் சிறிது ஆராய்வோம்.

நாம் வானவெளியில் விடும் பட்டங்கள் சிலவற்றிற்கு விண்பூட்டுகிறோம். விண்ணுடன் பொருத்தப்பட்டுள்ள அதன் ஒரு பகுதியாகிய நாரிலே காற்றினால் அதிர்வுகள் ஏற்படுகின்றன. அவ்வதிர்வுகளே ஒலிக்குக் காரணமாய் அமைகின்றன. பட்டத்தை இறக்கிக் காற்று வீசாத இடத்தில் வைப்போமானால் விண்ணிலிருந்து ஒலி உண்டாகாமையையும் காண்கிறோம். விண்ணில் காற்று உரமாகப் பிடிக்க வைத்து அதில் எழும் துடிப்புகளே சப்தத்திற்குக் காரணம் என்பதையும், துடிப்புகளைக் கைவிரல்களினால் தடுத்து நிறுத்தியவிடத்து சப்தம் எழாதிருத்தலையும் நாம் கண்டுணர்லாம்.

துவிச்சக்கர வண்டியில் பொருத்தப்பட்ட மணியினை அடித்தும் அதிலிருந்து எழும் அதிர்வுகளே ஒலிக்கு மூலாதாரம் என்பதை நாம் அனுபவத்தால் உணர்ந்து கொள்ள முடியும்.

## ஒலி பரவுதல்


குளத்திலோ, அல்லது நீர் பரவலாக உள்ள நீர்த்தேக்கம் ஒன்றிலோ ஒரு சிறு கல்லைப் போடுவோமானால் கல் விழுந்த இடத்தைச் சுற்றி அலை உண்டாவதையும், ஒரே கன அளவுடைய கற்களைப் போட்டுக் கொண்டே இருப்போமானால் அலைகளும் தொடர்ந்து ஒரே அளவினதாய் எழுந்து பரவுவதையுங் காணலாம். நாம் போடுங் கற்கள் ஒரே கன அளவினதாயின்றியும் ஒவ்வொரு கல்லையும் போடுங்கால் வெளி கூடியுங் குறைந்தும் இருக்குமானால் பெரியதும் சிறியதுமான பலதரப்பட்ட அலைகள் ஒழுங்கற்றனவாய் எழுந்து பரவுவதையுங் காணலாம். நீரில் அலைகள் ஒழுங்காய் எழுந்து பரவுதல் போல், எந்தப் பொருள்களின் துடிப்புகளும் ஒழுங்காய் அமைவதினால் அத்துடிப்புகளில் இருந்து எழும் ஒலி அலைகளும் செவிக்கு இனிமையைத் தருகின்றன. ஒழுங்கான அலைகளைப் படம் ஒன்றிலும் ஒழுங்கீனமான அலைகளைப் படம் இரண்டிலும் காண்க.




படம் 1




படம் 2




படம் 3



படம் 4



படம் 5



படம் 6

படம் 3-ல் காட்டியபடி பெரியதும் சிறியதுமான ஒழுங்கமைந்த பலதரப்பட்ட குச்சிகள் சிலவற்றை ஓரிடத்தில் பரவலாகப் போடுவோம். இதுபோன்ற வேறு பல குச்சிகளைப் படம் 4-ல் காட்டியபடி ஒழுங்கு அமைய அடுக்குவோமானால் அடுக்கப்பட்ட குச்சிகள் கண்ணுக்கு அழகைக் கொடுப்பது போன்று ஒழுங்காக எழுந்து பரவும் ஒலி அலைகளும் செவிகளுக்கு இனிமையைத் தருகின்றன.

படம் 5-ல் காட்டப்பட்ட சில முக்கோணிகள் படம் 6-ல் காட்டப்பட்டபடி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறே பிரமாணங்களுக்கமைந்த சிறியதும் பெரியதுமான பல குச்சிகளைக்கொண்டு அலங்காரமான வடிவங்களை அமைக்க முடியும். இவைகளைப்போன்று ஒலித்துடிப்புகளும் ஒழுங்கிற்கமைய எழுந்து காற்றிற் பரவும்போது அவை செவிக்கு இனிமையைக்கொடுக்கின்றன.

நமது வீட்டிலுள்ள பொருட்கள் தொழிற்கூடங்களிலுள்ள பொருட்கள், பாடசாலைகளிலுள்ள தளபாடங்கள் யாவும் ஒழுங்கிற்கமைய இருக்குமானல் அவை அழகாய் இருக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? இவ்வாறே நாம் அன்ருடம் செய்யும் கருமங்கள், தொழிற்றுறைகள். உணவுவகைகள் யாவும் ஒழுங்குபடுத்தப்படுமானுல் வாழ்க்கை வளம்பெறும். இவ்வாறே ஒலித்துடிப்புகளும் ஒழுங்குபடுத்தப்படுவதனுல் ஒலி நாதம் என்னும் பெயரைப் பெறுகின்றது. இந்த நாதமே இசைக்கு மூலாதாரமாய் விளங்குகின்றது.

## நாதம்

இசைக்கலைக்கு மூலாதாரமாய் விளங்குவது நாதமாகும், நாதம், ஒலி, சப்தம் ஆகிய பதங்கள் ஒன்றிற்கொன்று பொருள் நிலையில் வேறுபாடுடையனவாகும்.

ஒலிக்குக் காரணமாய் இருக்கும் துடிப்புகள் ஒழுங்குபடுத்தப்படுமானுல் அத்துடிப்புகள் செவிக்கு இனிமையைக் கொடுக்கும். இவ்வினிமையான ஒலியினையே நாதம் என்பர். ஒலி அலைகள் ஒழுங்கீனமாக எழுமானுல் அவை வெறும் ''சப்தம்'' எனப்படும். ஒலி அலைகள் ஒழுங்குபடுத்தப்படுவதனுலேயே இசை பிறக்கின்றது எனக் கூறின் அதுமிகையாகாது நமது; வாழ்க்கையில், பழக்கவழக்கங்களும், கருமங்களும் ஒழுங்குபடுத்தப்படுமானுல் வாழ்க்கையே சிறப்படையும். இவ்வாறே ஒலித்துடிப்புகள் ஒழுங்குபடுத்தப்படுமானுல் அது வெறும் ஒலியாகவோ சப்தமாகவோ இராது, நாதமெனும் பெயரைப்பெற்று விடும்.

இந்த நாதம் ஆகதநாதம், அனுகதநாதம் என இருவகைப்படுமென்பர். ஆகதநாதம் சாதாரண மக்களால் உணரக் கூடியதென்றும், அனுகதநாதம் யோகிகளால் உணரக் கூடியதென்றும் நாத ஆராய்வினர் கூறி வைத்தனர்.

## சுருதி

பாட்டைத் தொடங்குவதற்கு அடிப்படையாக உள்ள விசேட ஒலி சுருதியெனப்படும். ஒரு இராகத்திற்கு இருக்க வேண்டிய சுரஸ்தானங்களில் எவையேனும் வேண்டிய பிரமாணத்திற்கு அமையாது கூடியோ, குறைந்தோ வேருக நிற்குமாயின் சுருதி சேராத பாடல் என்கிருேம். இப்பாடல்கள் கேட்பவர்களுக்கு வெறுப்பையும்' விரக்தியையும் உண்டு பண்ணும். சுருதி, சட்சமம், பஞ்சமம் ஆகிய சுரங்களின் செயற்கையினுல் உண்டுபண்ணப்படுகிறது. றீட்ஸ் (Reeds) வாத்தியங்களில் ஆதார சட்சமம், மத்திமஸ்தாய் பஞ்சமம், மேல் ஸ்தாய் சட்சமம் ஆகிய ஸ்வரங்களையே சுருதிக்கு வைக்கப்படும். இதனையே ''பஞ்சம சுருதி'' என்பர்.

இசை உலகில் சுருதிக்குத் தாயகமாம் தன்மை அளிக்கப்பட்டுள்ளது. இதனையே 'சுருதி மாதா, லயம் பிதா'' என்னும் வாக்கியம் வெளிப்படுத்துகின்றது. தாய் இல்லாமல் எப்படிச் சேய் பிறப்பதில்லையோ, அப்படியே சுருதி இல்லாமல் இசை பிறப்பதில்லை. அப்பியாச கானம் எனப்படும் ஆரம்பப் பாடகாலம் தொட்டு சுருதியுடன் சேர்ந்து பாடிப் பழகுவோர் சிறந்த இசை ஞானிகளாவர் என்பதில் சற்றும் ஐயமில்லை.

சுருதிக்குச் சுருதி வாத்தியங்கள் பல உபயோகிக்கப்பட்ட போதிலும் தம்புராச் சுருதியே மிகச் சிறந்ததாகும். சுத்தமாகச் சுருதி சேர்க்கப்பட்ட தம்புராவை மீட்டிக் கொண்டே இருந்தால் இவ்வுலகில் வேறெதுவுமே வேண்டியதில்லை யென்பது போன்ற ஒருவகை உணர்வு உண்டாகும்.

ஹார்மோனிய ( Harmoniam ) த்தில் உள்ள வெள்ளைக் கட்டைகளை முறையே 1, 2, 3, 4, 5, 6 கட்டைச் சுருதிகள் எனவும், கறுப்புக் கட்டைகளை முறையே $1\frac{1}{2}$, $2\frac{1}{2}$, $4\frac{1}{2}$, $5\frac{1}{2}$, $6\frac{1}{2}$ எனவும் கொள்ளவும். முதலாவது வெள்ளைக் கட்டையைச் சட்சமமாக வைத்துப் பாடுவோமானால் ஒரு கட்டைச் சுருதியெனவும், இரண்டாவது வெள்ளைக் கட்டையைச் சட்சமமாக வைத்துப் பாடுவோமானால் இரண்டு கட்டைச் சுருதி எனவும் கொள்ளவும்.

சிறுவர்களும், பெண்களும் சாதாரணமாக 4 தொடக்கம் $5\frac{1}{2}$, 6 கட்டை வரையில் பாடக்கூடியவாறு குரல் வளம் அமைந்திருக்கும். வளர்ந்த ஆண்களில் மிகச் சிலரால் மட்டுமே இச்சுருதியில் பாட முடியும். இவர்களின் சாதாரண சுருதி ஒரு கட்டை தொடக்கம் 2, $2\frac{1}{2}$ வரையிலாகும்.

ஒரு கட்டைக்குக் குறைந்த சாரீர வளம் உள்ளவர்களும் உளர். கூடிய சுருதியிற் பாடுபவர்கள் திறமைமிக்கவர்களென்றோ, குறைந்த சுருதியில் பாடுபவர்கள் திறமை அற்றவர்களென்றோ பொருள் கொள்ளலாகாது. இது அவரவர் குரல் வளத்தின் இயற்கை அமைப்பையும், உடல் நிலையையும் பொறுத்ததாகும்.

சுருதியில் ''கட்டை''யென்னும் சொல் ஹார்மோனியத்தில் உள்ள கட்டைகளையே குறிக்கும்.

## சுரங்கள் 7உம், ஸ்தானங்கள் 12உம்

7 ஸ்வரங்களின் பெயர்கள் வருமாறு:

| | |
|---|---|
| 1. சட்சமம் | 4. மத்திமம் |
| 2. ரிடபம் | 5. பஞ்சமம் |
| 3. காந்தாரம் | 6. தைவதம் |
| 7. நிடாதம் | |

இச்சுரங்கள் ஏழும் 'சப்த' சுரங்கள் எனப்படும். 'சப்த' என்னும் சொல் ஏழு என்னும் எண்ணைக் குறிக்கும். மேல் சட்சமத்துடன் எட்டுச் சுரங்களும் 'அட்டகம்' எனப்படும். 'அட்ட' என்னும் சொல் எட்டு என்னும் எண்ணைக் குறிக்கும்.

சப்தஸ்வரங்களில் சட்சமம், பஞ்சமம் ஆகிய இரண்டு சுரங்களும் பேதமற்றவை மற்றைய ரிகமதநி ஆகிய ஐந்து ஸ்வரங்களும் கோமள தீவிர பேதமடைகின்றன.

மனிதன் இயற்கையின் வாழ்வியலோடு ஒன்றித்ததாகவே இசைக்கலையையுங்கண்டான். அவன் தன்னுடைய வாழ்நாட் காலங்களை வாரமாகவும், மாதங்களாகவும் இவைகள் அடங்கியதை வருடங்களாகவும் கொண்டான். ஒரு வாரத்தை ஏழு நாட்களாகவும், ஒரு வருடத்தைப் பன்னிரண்டு மாதங்களாகவும் வகுத்தான். அவ்வரையறுப்பைப் போலவே ஆத்மாவைப் புனிதமாக்கும் இசையின் சுரங்களை ஏழாகவும் சுரங்களின் ஸ்தானங்களைப் பன்னிரண்டாகவும் பகுத்தான்.

1 ஸ்தானங்களின் பெயர்கள்:

| | |
|---|---|
| 1. சட்சமம் | 7. பிரதிமத்திமம் |
| 2. சுத்தரிடபம் | 8. பஞ்சமம் |
| 3. சதுசுருதி ரிடபம் | 9. சுத்ததைவதம் |
| 4. சாதாரண காந்தாரம் | 10. சதுசுருதிதைவதம் |
| 5. அந்தரகாந்தாரம் | 11. கைசிகிநிடாதம் |
| 6. சுத்தமத்திமம் | 12. காகலி நிடாதம் |

கோமள சுரம் சுருதியிற் குறைந்தும், தீவிர சுரம் சுருதியிற் கூடியும் இருக்கும். கோமள சுரங்களைச் சிறிய சுரங்களென்றும், தீவிர சுரங்களைப் பெரிய சுரங்களென்றும் சுருக்கமாகச் சொல்வர். சுரங்கள் ஏழும் கோமள தீவிர பேதங்களினுல் 12 ஸ்தானங் களைப் பெறுகின்றன.

ஏழு ஸ்வரங்களில் சட்சமம் பஞ்சமமாகிய இரண்டு சுரங்களையும் தவிர ஏனைய ரிடப, காந்தார, மத்திம, தைவத, நிடாதமாகிய ஐந்தும் இவ்விரண்டு ஸ்தானங்களைப் பெறுகின்றன. சட்சம, பஞ்சமமாகிய இரண்டும் ஒவ்வொரு ஸ்தானங்களைப் பெறுகின்றன. ஆகவே, மொத்தம் ( 5 X 2 = 10 + 2 = 12 ) 12 ஸ்தானங்களாகின்றன. இவைகளைப் பின்வருமாறு காணலாம்.

ரி க ம ப த நி

1 ⏞ ⏞ ⏞ 1 ⏞ ⏞

சரி ரிக கம மபத தநி நி

## சுரவரிசைகள் பகுதி 1

மொழி ஒன்றினைக் கற்றுக் கொள்பவர்கள் அம்மொழிக்குரிய எழுத்துக் களையும், அவ்வெழுத்துக்களின் ஒலிகளையும் முதலில் உச்சரிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அதுபோலவே இசைக்கலையைக் கற்றுக் கொள்பவர்களும் சுரங்களையும் சுர ஒலிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளையும் முதலில் நன்கு விளங்கிக் கொள்ளவும், அவ்வொலிகளை நயமாக வெளியிடவும் பழகிக் கொள்ள வேண்டும். இப்பயிற்சிக்காக ஆக்கப்பட்ட வரிசைகள் சுரவரிசைகள் என்பது பொருத்தமுடையதாகும்.

இவ்வாரம்பப் பாடத்தை ஸ்வராவளி வரிசைகளென்றும், சரளி வரிசைகளென் றும்' ஸ்வர வரிசைகளென்றும் பலரும் பலவாருகப் பெயரிட்டழைப்பர். இவ்வரிசை களைக் கிரமப்படுத்துவதிலும் — ஒழுங்குபடுத்துவதிலும் வெவ்வேறு வழிகளைக் கையாண் டுள்ளனர்.

ஏதேனும் ஒரு விதிக்கமைய இவ்வரிசைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வது நன்மை பயக்கும். முதல்வரிசை சட்சமம் தொடக்கம் மேல் சட்சமம் வரை ஒழுங் காகச் சென்று திரும்பி மேல் இருந்து கீழ் நோக்கி வருவதைக் கவனிக்கவும். இரண் டாவது வரிசை இரண்டு சுரங்களுடன் சரி சரி எனத் திரும்புதலும், மூன்ருவது வரிசை சரிக சரிக என மூன்று சுரங்களுடனும், நான்காவது வரிசை சரிகம சரிகம என நான்கு சுரங்களுடன் திரும்புதலையும் கவனிக்கவும். சுரவரிசைகள் எத்தனை கற்கவேண்டுமென்பது கற்றுக்கொள்ளும் மாணவனைப் பொறுத்த விடயமாகும். திறமை யான மாணவனுக்கு அதிகமான வரிசைகளும், நீண்டகாலப் பயிற்சிகளும் தேவையில்லை பலதரப்பட்ட மாணவரும் கற்றுக்கொள்கிருேமாகையால் வரிசைகள் அதிகரிக்கப்பட் டுள்ளது. இவ் வரிசைகளை மாயாமாளவகௌளை இராகத்தில் ஆதி தாளத்திற்கமையப் பாடிப் பழகுவது கற்றுக் கொள்பவர்களுக்கு இலகுவாக இருக்கும் என முன்னேர்

கண்டுள்ளனர். அப்பியாசத்திற்குரிய இவ்வரிசைகளை நன்கு பயின்ற பின்னரே அடுத்த பாடத்தைக் கற்க முற்படவேண்டும். வரிசைகள் எட்டும் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை நன்கு கவனிப்போமானுல் இலகுவாக மனப்பாடம் செய்துவிடலாம். இவ் வரிசைகளை முதலாங் காலத்தில் மட்டும் பாடிப்பயின்ற பின்னரே இரண்டாம் காலப் பயிற்சியை மேற்கொள்ளவும்.

முதல் வரிசை சரிகமபதநிச் என்னும் எட்டுச் சுரங்களில் 'ச' தொடக்கம் மேல் 'ச்' வரையும் ஒழுங்காகச் சென்றுள்ளதைக் கவனிக்கவும். இவ் வரிசையை,

ச ரி க ம ப த நி ச்

——————>

<—————— இவ்வாறு வரைந்து கொள்வது மனனம் செய்வதற்கு உதவியாக இருக்கும். இரண்டாவது வரிசையை,

ச ரி க ம ப த நி ச்

2 ->
->
——>
——————>
<—
<—
<——
<—————— இவ்வாறும்,

மூன்ருவது, நான்காவது வரிசைகளையும் முறையே,

ச ரி க ம ப த நி ச்

3 ——>
——>
->
——————>
<——
<——
<-
<——————

ச ரி க ம ப த நி ச்

4 ——>
——>
——————>
<——
<——
——————> இவ்வாறும் வரைந்து கொள்ளலாம். அட்சரகால அளவை அதி

கமாகக் கொண்டுள்ள நெடில் சுரங்களைப் பெறும் 5ஆவது, 7ஆவது வரிசைகளை"

ச ரி க ம ப த நி ச்

5 ————> ,

->

——————————>

, <————

<-

<——————————

ச ரி க ம ப த நி ச்

7 ——————> ,

————————>

, <——————————

<—————————— இவ்வாறும் வரையலாம்.

பின்னலாகவோ, ஒழுங்கீனமாகவோ வரும் பாடங்களுக்கு இவ்வழிகள் பொருநதா.

## சுரவரிசைகளின் அமைப்பினை எண்களில் காணுதல்

முந்திய பாடத்தில் சுரவரிசைகளை அம்புக்குறி மூலம் கோடிட்டு உணர்ந்தோம். இப்பாடத்தில் இவ்வரிசைக் கிரமத்தை எண்கள் மூலம் காண்போம். சுரவரிசைகளின் அமைப்பினை இலகுவாகக் காண்பதற்கு 8 ஸ்வரங்களுக்கும் எட்டு எண்களைக் கொடுப் போம். அவை பின்வருமாறு:

ச ரி க ம ப த நி ச்

1 2 3 4 5 6 7 8 இவ்வெண்களைக் கணித முறைப்படி ஏறு நிரையில் காண்கிறோம் இது முதலாவது வரிசையின் அரைவாசி—(இரண்டில் ஒரு பகுதி) ஆகும்.

மற்றைய ஒரு பகுதி இவ்வெண்களை இறங்கு நிறையிற் காண்பதாகும், அவை பின் வருமாறு :

ச் நி த ப ம க ரி ச

8 7 6 5 4 3 2 1 இரண்டு பகுதிகளும் சேர்ந்ததே முதலாவது வரிசையெனக் கொள்ளவும்.

இரண்டாவது வரிசையையும் இவ்வாறு காண்போமாளுல் அது,

| | | | |
|---|---|---|---|
| 1 2 1 2 | 1 2 3 4 | 1 2 3 4 | 5 6 7 8 |
| 8 7 8 7 | 8 7 6 5 | 8 7 6 5 | 4 3 2 1 |

என அமையும். இவைகளைக் காலக் கிரமத்துள் அடக்குவதே தாளம் எனப் படும். இவைகளைத் தாள அங்கங்களுள் அடக்குவோமானுல்,

முதலாவது வரிசை;

1 2 3 4 | 5 6 | 7 8 | |

8 7 6 5 | 4 3 | 2 1 | | எனவும்,

இரண்டாவது வரிசை:

1 2 1 2 | 1 2 | 3 4 | | 1 2 3 4 | 5 6 | 7 8 | |

8 7 8 7 | 8 7 | 6 5 | | 8 7 6 5 | 4 3 | 2 1 | |

எனவும் அமையும். இவ்வாறே ஏனைய வரிசைகளையுங் காண்போமாக.

நெடில் ஸ்வரங்களைக் கொண்ட'' 5ஆவது, வரிசையைப் பின்வருமாறு காண்போம்,

5 ஆவது வரிசை:

1 2 3 4 / 5 ா / 1 2 / / 1 2 3 4 / 5 6 / 7 8 / /

8 7 6 5 / 4 ா / 8 7 / / 8 7 6 5 / 4 3 / 2 1 / /

இவ்வாறு ஏனைய வரிசைகளையும் எழுதிப் பயிற்சி செய்து கொள்ளவும்.

### காலம்

காலம் என்பது பற்றிப் பலரும் பலவாருக விரித்துக் கூறிய போதிலும் இசைக் கலையோடொத்த அனுபவத்தில் விளம்பம், மத்திமம், துரிதம், எனப்படும் முதலாம், இரண்டாம்,மூன்ருங் காலங்களையே குறிப்பிடலாம். அப்பியாச கானங்கள் எனப்படும் அலங்காரமும், அதற்கு உட்பட்ட பாடங்களும் முதலாம் காலம் ஒரு அட்சரத்திற்கு ஒரு சுரமாகவும், இரண்டாங் காலம் ஒரு அட்சரத்திற்கு இரண்டு சுரங்களாகவும், மூன்ருங் காலம் ஒரு அட்சரத்திற்கு நான்கு சுரங்களாகவும் பாடப்படுகிறது. இது அனுபவரீதியில் கண்ட உண்மையாகும்.

வர்ண பாடங்களும், அதற்கு மேற்பட்ட பாடங்களும் முதலாங் காலம் ஒரு அட்சரத்திற்கு நான்கு சுரங்களாகப் பாடக் கேட்கிருேம். இரண்டாங் காலம் எட்டுச் சுரங்களைக் கொண்டிருக்கும்-

ஆரம்பப் பாடமானுலும் சரி, கீதம், வர்ணம்,கீர்த்தனை போன்ற பாடங்களானுலும் சரி, இப்பாடல்களுக்குத் துரிதகாலப் பயிற்சிதான் அவசியமென்ருே, அல்லது மதிப்பு மிக்கதென்ருே சொல்வதற்கில்லை. பாடம் எதுவானுலும் அப்பாடம் முதலில் சுரசுத்தமும் லயப்பிடிப்பும் உடையதாய் இருக்கவேண்டும்.

கால் உறுதி அடையாத-சரிவர நடக்கமுடியாத குழந்தை வேகமாக நடக்கவோ, ஓடவோ முற்பட்டால் அதன் முடிவு எப்படி இருக்குமோ அப்படியே சுர ஞான பலமும் லயப்பிடிப்பும் இல்லாத துரித காலப் பயிற்சியின் முடிவுமாகும்.

### லயம்

ஆன்மா லயம் அடைய ஆண்டவன் சந்நிதானம் சென்று வழிபாடு செய்கிருேம். இங்கே ''லயம்'' என்னும் சொல் ஆன்மா ஒருநிலைப்பட—ஒடுங்கி ஏகாந்த நிலை அடைய என்று பலவாறு சொல்லபாப்ட்ட போதிலும் அதன் உட்பொருள் ஒன்றையே குறுத்துநிற்கும். லயம் என்னும் சொல் இசையேடு தொடர்புறும்போது எங்கள் சக்தியை ஒரு நிலைப்படுதி

காலப்பிரமாணம் தவருமல் நேர்வழி செல்லுதல் என்னும் பொருளிலேயே நிற்கும் சுருங்கக் கூறின், பாட்டின் கால அளவைக் கைகளினுலோ கருவிகளினுலோ தட்டிக் காண்பித்தல் தாளமென்றும், தாளத்தை ஒரே காலப் பிரமாணத்திற்கமைய நடத்திச் செல்லுதல் லயம் என்றும் கூறலாம்.

சுருதி மாதா, லயம் பிதா என்னும் வாக்கியத்தில் லயம் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. குடும்பத்தில் தந்தையின் இடத்தை இசையில் தாளம் வகிக்கின்றது. தாளம் இல்லாத பாடல்கள் பல இருக்கலாம். ஆனுல் லயம் இல்லாத பாடல்கள் இருக்க முடியாது. அப்படி இருப்பின் அவை உயிரில்லாத உடலுக்குச் சமானமாகும்.

தாளத்தினின்று லயத்தை வேருகக் காண்பது பழத்தினின்று பழச்சுவையை வேருகப் பிரிப்பது போன்றதாகும். தாள அங்கங்களையோ, அட்சரங்களையோ வேறுபடுத்தினுல் அது பெரும் குறைபாடாகா. அன்றியும், பாடுவதற்குப் பெரும் பாதகமாகவும் அமையா. லயம் அவலயமானுல்—பாட்டைக் கேட்பவர் பெரும் அருவருப்படைவர்.

லய ஞானத்தைப் பெற விரும்பின் இசை கற்கத் தொடங்குங் காலத்திலேயே, அதாவது சிறு பிராயத்திலேயே முயற்சிக்க வேண்டும். ஆரம்ப வரிசைகளைத் தகுந்த ஆசிரியரிடங் கற்றுக் கொள்வதுடன், எந்திரசாதனங்களின் உதவியையும் நாடலாம். வீட்டில் உள்ள மணிக்கூடு, நீர் இறைக்கும் எந்திரம் இவைகளில் இருந்து உண்டாகும் ஒழுங்கான ஒலிகளை உதவியாகக் கொண்டு லய ஞானத்தை விருத்தி செய்து கொள்ளலாம்.

''நல்லாரைக் காண்பதுவும் நன்று, நல்லோர் சொற்கேட்பதுவும் நன்று'' என்பது போன்று நல்ல லயமான பாடல்களைக் கேட்பதுவும், அவர்களோடு சேர்ந்து பாடுவதும் எமது ஞானத்தை வளர்க்க உதவியாயிருக்கும்.

**சுரவரிசைகள் பகுதி 2**

1. சாரீ காமா / பாதா / நீச்சா / /
   ச்நீ தாபா / மாகா / ரீசா / /

2. சரிசரி / சரி / கம / / சரிகம / பத / நிச் / /
   ச்நிச்நி / ச்நி / தப / / ச்நிதப / மக / ரிச / /

3. சரிக-ச / ரிக / சரி / / சரிகம / பத / நிச் / /
   ச்நித-ச் / நித / ச்நி / / ச்நிதப / மக / ரிச / /

4. சரிகம / சரி / கம / / சரிகம / பத / நிச் / /
   ச்நிதப / ச்நி / தப / / ச்நிதப / மக / ரிச / /

5. சரிகம / பா / சரி / / சரிகம / பத நிச் / /
   ச்நிதப / மா / ச்நி / / ச்நிதப / மக ரிச / /

6. சரிகம / பத / சரி / / சரிகம / பத நிச் / /
   ச்நிதப / மக / ச்நி / / ச்நிதப / மக ரிச / /

7. சரிகம / பத / நீ / / சரிகம / பத நிச் / /
ச்நிதப / மக / ரீ / / ச்நிதப / மக ரிச / /

8. சரிகம / பத / நிச் / / சரிகம / பத நிச் / /
ச்நிதப / மக / ரிச / / ச்நிதப / மக ரிச / /

சுரவரிசைகளை மனனம் செய்வதுதான் நோக்கமாகக் கொள்ளலாகாது. சுரநாதத்தினை மனதில் பதித்துக் கொள்வதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

சுரவரிசைகள் 2ஆம் காலம்

சுரவரிசைகளை ஆசிரியரின் உதவியுடன் சுத்தமாகப் பயின்ற பின்னரே கீழே தரப்பட்‌ வாறு இரண்டாங் காலப் பயிற்சியைத் தொடங்கவும். தாளத்தில் எந்த வகையான மாற்றமும் செய்யாமல் இரண்டாங் காலத்திற்கு இருமடங்கு வேகமாகவும், மூன்றாங் காலத்திற்கு முதலாங் காலத்தின் நான்கு மடங்கு (இரண்டாங் காலத்தின் இரு மடங்கு) வேகமாகவும் பாடவும் இரண்டாங் காலம் ஒரு அட்சரத்திற்கு இரண்டு சுரங்களாகவும், மூன்றாங்காலம் ஒரு அட்சரத்திற்கு நான்கு சுரங்களாகவும் அமையும்.

வாத்திய சங்கீதம்:

வாத்திய சங்கீதம் பயிலுவோர் மிகவும் பொறுமைசாலிகளாய் இருத்தல் அவசியம் இவர்கள் வாய்ப்பாட்டுச் சங்கீதம் கற்றுக் கொள்பவர்களிலும் பார்க்க நீண்ட காலப் பயிற்சி செய்ய வேண்டும் எக்காரியத்தையும் நிதானமாகவும், பொறுமையுடனும் ஆற்றித் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இசைக்கருவிகளில் வீணை, வயலின், நாதஸ்வரம், புல்லாங்குழல் போன்ற பாட்டு வாத்தியங்களைக் கையாள்பவர்கள் நாளொன்றிற்குக் குறைந்தது ஒரு மணி நேரமாகிலும் சுர, லய சுத்தமாகப் பயிற்சி செய்ய வேண்டும்.

விசேடமாக வயலின் வாத்தியம் பயிலுவோர் ஒரு (Bow) வில்லிற்கு ஒரு சுரமாகச சுருதி, சுரஸ்தான லயத்துடன் முதலாங் காலப் பயிற்சியை முடித்துக் கொண்ட பின்னர்தான் இரண்டாங் காலப் பயிற்சியைத் தொடங்க வேண்டும்.

**முதலாவது வரிசை:**

முதலாம் காலம்

சரிகம / பத / நிச் / /
ச்நிதப / மக / ரிச / /

இரண்டாம் காலம்

சரிகம பதநிச் / ச்நிதப / மகரிச / /
சரிகம பதநிச் / ச்நிதப / மகரிச / /

**இரண்டாவது வரிசை:**

முதலாம் காலம்

சரிசரி / சரி / கம / / சரிகம / பத / நிச் / /
ச்நிச்நி / ச்நி / தப / / ச்நிதப / மக / ரிச / /

இரண்டாம் காலம்

சரி சரி சரிகம / சரிகம / பதநிச் / /
ச்நி ச்நி ச்நிதப / ச்நிதப / மகரிச / /

**மூன்றுவது வரிசை:**

முதலாம் காலம்

சரிக-ச / ரிக / சரி / / சரிகம / பத / நிச் //
ச்நித-ச் / நித / ச்நி / / ச்நிதப / மக /ரி ச //

இரண்டாங்காலம்

சரிக-ச ரிக-சரி / சரிகம / பதநிச் / /
ச்நித-ச் நித ச்நி / ச்நிதப / மகரிச / /

**நான்காவது வரிசை:**

முதலாம் காலம்

சரிகம / சரி / கம / / சரிகம / பத நிச் / /
ச்நிதப / ச்நி / தப / / ச்நிதப / மக ரிச / /

இரண்டாங்காலம்

சரிகம சரிகம / சரிகம / பதநிச் / /
ச்நிதப ச்நிதப / ச்நிதப / மகரிச / /

**சுரவரிசைகள் பகுதி 3**

9. சரிகம / பா / கம / / பா ; / பா ; / /
கமபத / நித / பம / / கமபக / மகரிச / /

10. ச்ாநித / நீத / ப / / தாபம / பா / பா / /
கமபத / நித / பம / / கமபக / க / ரிச / /

11. ச்ச்நித / நிநி / தப / / ததபம / பா / பா / /
கமபத / நித / பம / / கமபக / மக / ரிச / /

12. சரிகரி / கா / கம / / பமபா / தப / தா / /
மபதப / த்நி / தப / / மபதப / மக / ரிச / /

13. சரிகரி / கம / கம / / கமபம / பத / பத / /
ச்நிதநி / தப / தப / / தபமப / மக / ரிச / /

14. சரிகம / பம / தப / / சரிகம / பத / நிச் / /
ச்நிதப / மப / கம / / ச்நிதப / மக / ரிச / /

15. சரிகம / பம / கரி / / சரிகம / பத / நிச் / /
ச்நிதப / மப / தநி / / ச்நிதப / மக / ரிச / /

## தாளம்

பாட்டின் காலப் பிரமாணத்தை அனுசரித்துக் கைகளினுலோ, கருவிகளினுலோ தட்டுதல் தாளம் எனப்படும். தாளத்தில் அடங்கி நிற்கும் எண்ணிக்கைகள் ஒவ்வொன்றும் அட்சரம் எனப்படும். இவ் அட்சரத்துள் அடங்கியிருக்கும் எண்ணிக்கைகள் மாத்திரைகள் எனப்படும்,

ஆரம்பப் பாடங்கள் லகு, துருதம், அனுத்ருதம் என்னும் மூன்று அங்கங்களைக் கொண்டிருக்கும். இவ்வங்கங்களின் அடையாளங்களும் அவைகளின் கிரியைகளும் பின் வருமாறு : 'கிரியை' என்னும் சொல் செய்கை என்பதைக் குறிக்கும்.

| அங்கம் | அடையாளம் | கிரியை |
|---|---|---|
| லகு | 1 | அடித்து எண்ணுதல் |
| துருதம் | o | அடித்துப் புரட்டுதல் |
| அனுத்ருதம் | ‿ | அடித்தல் (தட்டுதல்) |

இவ் அங்கங்களினுல் ஏழு தாளங்கள் ஆக்கப்பட்டுள்ளன. அவைகள் பின்வருமாறு:

| தாளங்கள் | | அங்க அடையாளங்கள் |
|---|---|---|
| ஏகம் | — | 1 |
| ரூபகம் | — | 0 1 |
| ஜம்பை | — | 1 U 0 |
| திருபுடை | — | 1 0 0 |
| மட்டியம் | — | 1 0 1 |
| அட | — | 1 1 0 0 |
| துருவம் | — | 1 0 1 1 |

ஒரு தாளத்திற்கு உரிய அங்கங்கள் ஒருமுறை முழுமையாகச் செயற்பட்டு முடியும் போது ஒரு ஆவர்த்தனம் என்பர்.

## ஜாதிகள்

லகுவில் அடங்கி நிற்கும் அட்சரகால எண்ணிக்கைகளை ஜாதிகள் காட்டி நிற்கும் ஜாதியின் காரணமாக லகுவின் எண்ணிக்கைகள் மாற்றமடையும். துருதம், அனுத்ருதம் ஆகிய அங்கங்களின் எண்ணிக்கைகள் ஜாதியின் காரணமாக மாற்றம் அடையாது. இவ் ஜாதிகள் ஐந்து வகைப்படும். அவையாவன வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| திஸ்ரம் | 3 | அட்சரங்களைக் | கொண்டுள்ளது. |
| சதுஸ்ரம் | 4 | ,, | ,, |
| கண்டம் | 5 | ,, | ,, |
| மிஸ்ரம் | 7 | ,, | ,, |
| சங்கீரணம் | 9 | ,, | ,, |

அட்சரத்துள் அடங்கி நிற்கும் எண்ணிக்கைகள் மாத்திரைகள் எனப்படும். இம்மாத்திரைகளையே நடைகளென்றும், கெதிகளென்றும் சொல்லப்படும்.

ஜாதிகள், நடை ஆகியவற்றின் வேறுபாடுகளையும் பின்வரும் உதாரணங்களில் இருந்து விளங்கிக் கொள்ளவும்.

1. திஸ்ர நடையில் அமைந்த சதுஸ்ரஜாதி திருபுடை தாளம்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அங்கங்கள் | 1 | | 0 | | 0 | |
| அட்சரங்கள் | 1 1 1 1 | + | 1 1 | + | 1 1 | = 8 அட்சரம். |
| மாத்திரைகள் | 3 3 3 3 | + | 3 3 | + | 3 3 | = 24 மாத்திரைகள் |

2. கண்ட நடையில் அமைந்த சதுஸ்ரஜாதி திருபுடை தாளம்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அங்கங்கள் | 1 | | 0 | | 0 | |
| அட்சரங்கள் | 1 1 1 1 | + | 1 1 | + | 1 1 | = 8அட்சரம் |
| மாத்திரைகள் | 5 5 5 5 | + | 5 5 | + | 5 5 | = 40மாத்திரைகள் |

3. திஸ்ரநடையில் அமைந்த கண்டஜாதி திருபுடை தாளம்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அங்கங்கள் | 1 | | 0 | | 0 | |
| அட்சரங்கள் | 1 1 1 1 1 | + | 1 1 | + | 1 1 | = 9அட்சரம் |
| மாத்திரைகள் | 3 3 3 3 3 | + | 3 3 | + | 3 3 | = 27மாத்திரைகள் |

லகுவில் அடங்கி நிற்கும் எண்ணிக்கைகள் (அட்சரங்கள்) ஜாதிகள் எனப்படும் தாளத்துள் அடங்கி நிற்கும் ஒவ்வொரு அட்சரத்துள்ளும் அடங்கி நிற்கும் எண்ணிக்கைகள் நடைகள் என்றும், மாத்திரைகள் என்றும் சொல்லப்படும்.

நடை என்று குறிப்பிடும்போது ஒரு அட்சரத்துள் அடங்கி நிற்கும் எண்ணிக்கைகளையே குறிக்கும்.

இங்கே தரப்பட்ட தாளங்கள் மூன்றும் திருபுடையாக இருந்தபோதிலும் ஜாதி நடை வேறுபாடுகளினால் அட்சரங்களும், அதன் உட்பிரிவுகளான மாத்திரைகளும் வேறுபாடடைகின்றன.

ஜாதியின் காரணமாக 7தாளங்களும், 35தாளமாவதைக் கீழே தரப்பட்டிருக்கும் சதுர அடைப்புப் படத்தைக் கொண்டு விளக்கம் பெறலாம்.


| | ஏகம் | ரூபகம் | ஜம்பை | திரிபுடை | மட்டியம் | அட | துருவம் |
|---|---|---|---|---|---|---|---|
| திஸ்ரம் | 3 | 5 | 6 | 7 | 8 | 10 | 11 |
| சதுஸ்ரம் | 4 | 6 | 7 | 8 | 10 | 12 | 14 |
| கண்டம் | 5 | 7 | 8 | 9 | 12 | 14 | 17 |
| மிஸ்ரம் | 7 | 9 | 10 | 11 | 16 | 18 | 23 |
| சங்கீரணம் | 9 | 11 | 12 | 13 | 20 | 22 | 29 |

சதுஸ்ரஜாதி திருபுடை தாளத்தினையே ஆதி தாளம் என வழங்கப்படுகிறது.

**எடுப்பு (கிரஹம்)**

தாளத்துடன் பாட்டை எடுப்பது எடுப்பு எனப்படும். இதைச் சமம், விசமம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்,

சமம் என்பது தாளத்துடன் பாட்டை ஒன்றாக ஒரே நேரத்தில் எடுத்தல் தாளத்திற்கு முந்தியோ, பிந்தியோ எடுத்தல் விசமம் எனப்படும். தாளத்திற்கு முன் பாட்டை எடுத்தல் அதீத எடுப்பு என்றும், தாளத்திற்கு பின் பாட்டை எடுத்தல் அனுகத எடுப்பு என்றும் சொல்லப்படும். பெரும்பாலான இசைப்பாடல்கள் சமஎடுப் பாகவும், அனுகத எடுப்பாகவுமே அமைந்துள்ளன.




பாடல்களின் சுரதாளக் குறிப்பில் இவ்வடையாளங்களைக் காட்டும்போது:

இவ்வடையாளம் $\frac{1}{4}$இடம் தள்ளி எடுப்பதையும்,

; இவ்வடையாளம் $\frac{1}{2}$இடம் தள்ளி எடுப்பதையும்,

; , இவ்வடையாளம் $\frac{3}{4}$இடம் தள்ளி எடுப்பதையும் காட்டி நிற்கும்.

இவ்வாறே ($1\frac{1}{2}$) ஒன்றரை அட்சரம் தள்ளி எடுப்பதை ; ; ; இவ்வாறு ஆறு மாத்திரைக்கு உரிய அடையாளமிட்டுக் காண்பிக்கப்படும். அடதாள வர்ணங்கள் இரண்டு அட்சரம் தள்ளி எடுப்பதை ; ; ; ; இவ்வாறு எட்டு மாத்திரைகளுக்கு உரிய அடையாளமிட்டுக் காண்பிக்கப்படும்.

## இரட்டை வரிசைகள்

இவ்வரிசைகள் இரண்டுச் சுரங்களாக அமைந்திருப்பதால் இவை "இரட்டை வரிசைகள்" எனப்பட்டன. இப்பாடத்தினை "ஜெண்டை" வரிசைகள் என்றும் சொல்வர், வாத்தியங்களில் வாசிப்பவர்கள் ஆரம்ப மாணவர்களாக இருந்தாலும் ஓரளவு வாசித்து விடலாம். பாடுபவர்கள் இவ்வரிசைகளைப் பாடுவது மிகக்கடினமானதென்றே சொல்ல வேண்டும்.

துள்ளுநடைப் பயிற்சியாகிய இவ்வரிசைகள் உள்ளத்தில் விறுவிறுப்பை உண்டு பண்ணும். அன்றியும் இவ்வரிசைகளை நன்கு அப்பியாசம் செய்வதன் மூலம் கற்பனை சுரம் பாடுவதற்கு வழிவகுத்தமை போலுமாகும்.

இவ்வரிசைகளைப் பாடும்போது ' ச ' என்னும் இடத்தில் சட்சமம் சுத்தமாகவும், இரண்டாவதாக வரும் ' ச ' என்னும் இடத்தில் ' ரி ' என்னும் ஸ்தானமும், அடுத்து

வரும் இரண்டு ரிடபமும் ஒலிக்கவேண்டிய இடத்தில் முறையே காந்தார மத்திம சுரங்களும் ஒலிக்கக்கூடும். ஆகவே இவ்வரிசைகளை மிகவும் கவனமாக நிதானத்துடன் பாட வேண்டும்.

பாட்டு வாத்தியம் போன்ற வீணை, வயலின் ஆகியவற்றின் துணையுடன் பாடுங்கால் இலகுவாக முன்னுக்கு வரமுடியும். தாமாகவே வாசித்துக் கொண்டு பாடவிரும்புபவர்கள் மெட்டுகள் அமைந்த வீணை, அல்லது நீட்ஸ் வாத்தியமாகிய ஹார்மோனியம் ஆகியவற்றை வாசித்துக்கொண்டு பாடலாம். மெட்டுகளோ, நீட்ஸ்களோ அல்லாத வாத்தியங்களை வாசித்துக்கொண்டு பாடுவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். சுரஞானமும், லயஞானமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஞான பலமுடையோர் வாசித்துக்கொண்டு பாடுதல் குற்றமாகாது.

## இரட்டை வரிசைகள்

1. சசரிரி / கக / மம / / பபதத / நிநி / ச்ச் / /
ச்ச்நிநி / தத / பப / / மமகக / ரிரி / சச / /

2. சசரிரி / கக / மம / / ரிரிகக / மம / பப / /
ககமம / பப / தத / / மமபப / தத / நிநி / /
பபதத / நிநி / ச்ச் / / ச்ச்நிநி / தத / பப / /
நிநிதத / பப / மம / / ததபப / மம / கக / /
பபமம / கக / ரிரி / / மமகக / ரிரி / சச / /

3. சசரிரி / கக / ரிரி / / சசரிரி / கக / மம / /
ரிரிகக / மம / கக / / ரிரிகக / மம / பப / /
ககமம / பப / மம / / ககமம / பப / தத / /
மமபப / தத / பப / / மமபப / தத / நிநி / /
பபதத / நிநி / தத / / பபதத / நிநி / ச்ச் / /
ச்ச்நிநி / தத / நிநி / / ச்ச்நிநி / தத / பப / /
நிநிதத / பப / தத / / நிநிதத / பப / மம / /
ததபப / மம / பப / / ததபப / மம / கக / /
பபமம / கக / மம / / பபமம / கக / ரிரி / /
மமகக / ரிரி / கக / / மமகக / ரிரி / சச / /

4. சசாரி / ரீ / கக / / சசரிரி / கக / மம / /
ரிரீக / கா / மம / / ரிரிகக / மம / பப / /
ககாம / மா / பப / / ககமம / பப / தத / /
மமாப / பா / தத / / மமபப / தத / நிநி / /
பபாத / தா / நிநி / / பபதத / நிநி / ச்ச் / /
ச்ச்ாநி / நீ / தத / / ச்ச் நிநி / தத / பப / /
நிநீத / தா / பப / / நிநிதத / பப / மம / /
ததாப / பா / மம / / ததபப / மம / கக / /

பபாம / மா / கக / / பபமம / கக / ரிரி / /
மமாக / கா / ரிரி / / மமகக / ரிரி / சச / /
5. சாசரி / ,ரி / கக / / சசரிரி / கக / மம / /
ரீரிக / ,க / மம / / ரிரிகக / மம / பப / /
காகம / ,ம / பப / / ககமம / பப / தத / /
மாமப / ,ப / தத / / மமபப / தத / நிநி / /
பாபத / ,த / நிநி / / பபதத / நிநி / ச்ச் / /
ச்ாச்நி / ,நி / தத / / ச்ச்நிநி / தத / பப / /
நீநித / ,த / பப / / நிநிதத / பப / மம / /
தாதப / ,ப / மம / / ததபப / மம / கக / /
பாபம / ,ம / கக / / பபமம / கக / ரிரி / /
மாமக / ,க / ரிரி / / மமகக / ரிரி / சச / /

**ஸ்தாயி**

ஏழு சுரங்கள். கொண்ட ஒரு இடம் ஒரு 'ஸ்தாயி' எனப்படும். ஸ்தாயிக்கு நிலை என்றும் ஒரு பெயருண்டு. ஒலிக்குக் காரணமாய் இருக்கின்ற துடிப்புகளின் எண்ணிக்கை இருமடங்காகும்போது அது மேல் ஸ்தாயி எனப்படும். குறிப்பிட்ட அவ்வெண்ணிக் கையில் இரண்டில் ஒரு பகுதி துடிப்பெண்களைக் கொள்ளும்போது அது கீழ்ஸ்தாய் எனப் படும். உதாரணமாக, ஆதார சட்சமத்திற்குத் துடிப்பெண் 100 எனக் கொண்டால் மேல் சட்சமத்திற்குத் துடிப்பெண் 100இன் இருமடங்கு 200 எனக்கொள்ளவும். கீழ் சட்சமத்திற்கு ஆதார சட்சமத்துடிப்பெண் 100இன் அரைமடங்கு 50ஆகும். இவ் வாறே மத்திமஸ்தாயி ரிடபம் 125 துடிப்பெண்களைக் கொண்டிருக்குமாயின், கீழ் ஸ்தாய் ரிஷபம் 125இன் அரைமடங்கு $62\frac{1}{2}$த் துடிப்பெண்களையும், மேல் ரிடபம் 125இன் இரு மடங்கு 250 துடிப்பெண்களையும் கொண்டிருக்கும்.

சாதாரண மனித சாரீரத்தினுல் இரண்டு ஸ்தாய்களிலேயே பாட முடியும். நீண்டகாலப் பயிற்சியும் சாரீர வளமும் உள்ளவர்கள், மேலும் 2, 3 சுரங்கள் அதிக் மாகப் பாடமுடியும். கீழ்ஸ்தாயில் மத்திமம் அல்லது பஞ்சமம் வரையிற் சென்றும் மேல்ஸ்தாயிலும் மத்திமம், அல்லது பஞ்சமம் வரையிற் சென்றும் அதிகமான பாடல் கள் அமைந்திருக்கும்.

கீழ்ஸ்தாய்க்குச் சுரத்தின் கீழ் குற்றிட்டும், மேல்ஸ்தாயிக்குச் சுரத்தின்மேல் குற் றிட்டும் ஸ்தாயின் வேறுபாடுகள் காண்பிக்கப்படும்.

**மூன்று ஸ்தாய்களும், அவைக்குரிய சுரங்களும் வருமாறு:**

மேல்தாயி — ச்ரி க் ம் ப் த் நி

மத்திமஸ்தாயி — ச ரி க ம ப த நி

கீழ்ஸ்தாயி — ச ரி க ம ப த நி
. . . . . . .

கீழ்ஸ்தாய்க்குக் கீழேயுள்ள ஸ்தாயைக் காண்பிப்பதற்குச் சுரத்தின் கீழே இரண்டு குற்றும், மேல்ஸ்தாய்க்கு மேலேயுள்ள ஸ்தாயைக் காண்பிப்பதற்குச் சுரத்தின் மேலே இரண்டு குற்றும் இட்டுக்காண்பிக்கப்படும்.

ஸ்தாயின் வேறு பெயர்கள்:

| | | |
|---|---|---|
| ஸ்தாயி | — | நிலே |
| கீழ்ஸ்தாயி | — | மந்திரஸ்தாயி |
| மேல்ஸ்தாயி | — | தாரஸ்தாயி |
| மந்திரஸ்தாய்க்குக் கீழேயுள்ள ஸ்தாயி | — | அனுமந்திரஸ்தாயி |
| தாரஸ்தாய்க்கு மேலே உள்ள ஸ்தாயி | — | அதி தாரஸ்தாயி |

கீழ்ஸ்தாயி, மத்திமஸ்தாயி மேல்ஸ்தாய்களை முறையே மெலிவு, சமம், வலிவு எனவும் பெயரிட்டு அழைப்பர்.

## மேல் ஸ்தாயி வரிசைகள்

1\. சரிகம / பத / நிச் // ச்ா; / ச்ா / ; //
தநிச்ரி / ச்நி / தப // ச்நிதப / மக / ரிச //

2\. சரிகம / பத / நிச் // ச்ா; / ச்ா / ; //
தநிச்ரி / ச்ச் / ரிச் // ச்ரிச்நி / தப / மப //
தநிச்ரி / ச்நி / தப // ச்நிதப / மக / ரிச //

3\. சரிகம / பத / நிச் // ச்ா ; / ச்ா / ; //
தநிச்ரி / க்ரி / ச்ரி // ச்ரி ச்நி / தப / மப //
தநிச்ரி / ச்ச் / ரிச் // ச்ரி ச்நி / தப / மப //
தநிச்ரி / ச்நி / தப // ச்நிதப / மக / ரிச //

4\. சரிகம / பத / நிச் // ச்ா; / ச்ா / ; //
தநிச்ரி / க்ம் / க்ரி // ச்ரிச்நி / தப / மப //
தநிச்ரி / க்ரி / ச்ரி // ச்ரிச்நி / தப / மப //
தநிச்ரி / ச்ச் / ரிச் // ச்ரிச்நி / தப / மப //
தநிச்ரி / ச்நி / தப // ச்நிதப / மக / ரிச //

5\. சரிகம / பத / நிச் // ச்ா; / ச்ா / ; //
தநிச்ரி / க்ம் / ப்ம் // க்ரிச்நி / தப / மப //
தநிச்ரி / க்ம் / க்ரி // ச்ரிச்நி / தப / மப //
தநிச்ரி / க்ரி / ச்ரி // ச்ரிச்நி / தப / மப //
தநிச்ரி / ச்ச் / ரிச் // ச்ரிச்நி / தப / மப //
தநிச்ரி / ச்நி / தப // ச்நிதப / மக / ரிச //

ஐந்தாவது மேல் ஸ்தாயி வரிசை ஒன்றிற்குள்ளேயே முந்திய நான்கு வரிசைகளும் அடக்கமாய் இருப்பதை ஊன்றிக் கவனித்தாற் காணலாம். ஐந்தாவது மேல்ஸ்தாயி வரி

சையிலுள்ள முதலாவது வரியும் கடைசி வரியும் சேர்ந்து முதலாவது மேல்ஸ்தாயி வரிசையாக அமைந்திருப்பதையும், ஐந்தாவது வரிசையிலுள்ள முதல் வரியுடன் கடைசி இரண்டு வரிகளையும் சேர்த்தால் இரண்டாவது வரிசையாக அமைவதையுங் காணலாம். இவ்வாறே ஐந்தாவது மேல்ஸ்தாயி வரிசையின் முதல் வரியுடன் கடைசி மூன்று வரிகளையும் இணைத்தால் மூன்ருவது மேல்ஸ்தாயி வரிசையையும் காணலாம். இவ்வாறே ஒவ்வொரு மேல்ஸ்தாயி வரிசைகளுள்ளும் அதற்கு முந்திய வரிசைகள் மறைமுகமாய் இருப்பதை உணர்ந்து கொள்வோமாளுல் மனனம் செய்ய வேண்டிய அவசியமிரா.

## கர்த்தா இராகம் (பகுதி 1)

ஆரோகணத்தில் ஆதார சட்சமம் தொடக்கம் மேல் சட்சமம் வரை மாறுபாடு இல்லாமல் ஒழுங்காக எட்டுச் சுரங்களும், அவரோகணத்திலும் மேல் சட்சமம் தொடக்கம் ஆதார சட்சமம் வரை எந்தவகையான மாறுபாடுமில்லாமல் ஒழுங்காக எட்டுச் சுரங்களையும் கொண்டிருப்பது கர்த்தா இராகம் எனப்படும். இவ்விலக்கணங்களைக்கொண்ட இராகங்கள் 72 ஆகும். இவ்விராகங்களையே '' சம்பூரண'' இராகமென்றும், ''தாய்'' இராகமென்றும் சொல்வர். சம்பூரணம் என்னும் சொல் நிறைவு பெற்றுள்ளது என்றும், தாய் என்னும் சொல் வேறும் பல பிறக்கக் காரணமாய் இருந்ததென்றும் பொருள் படும். மேளகர்த்தா இராகம், மேள இராகம், ஜனக இராகம் என்னும் பெயர்களும் கர்த்தா இராகத்தையே குறிக்கும்.

இங்கே மாயாமாளவ கௌளை, தோடி, கல்யாணி, சங்கராபரணம், கரகரப் பிரியா, அரிகாமபோதி ஆகிய கர்த்தா இராகங்கள் ஆறிற்கும் சுரஸ்தானங்கள் தரப் பட்டுள்ளன. இவ்விராகங்கள் முறையே 15, 8, 65, 29, 22, 28ஆவது இராகங்களாகும் 72 கர்த்தா இராகங்களில் இவ்விராகங்கள் எத்தனையாவதாக அமைந்துள்ளன என்பதை இவ்வெண்கள் தெளிவுபடுத்தும். இந்த இராகங்கள் ஆறும் மிகப் பிரபல்யம் ஆனவை. பல ஜன்னிய இராகங்களின் தாய் இராகங்களாக இவை விளங்குகின்றன.

'' X ''இவ்வடையாளப் புள்ளிகள் அதன் நேரே மேல் இருக்கும் சுரஸ்தானங்களைக் காட்டி நிற்கும்.

| | ஆ. ச. | சு. ரி. | ச. ரி. | சா. கா. | அ. கா. | சு. ம. | பி. ம. | பஞ்சமம் | சு. தை. | ச. தை. | கை. நி. | கா. நி. | மே. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுரஸ்தானங்கள் 12உம், | ச | ரி | ரி | க | க | ம | ம | ப | த | த | நி | நி | ச் |
| மாயாமாளவகௌளை | X | X | — | — | X | X | — | X | X | — | — | X | X |
| தோடி | X | X | — | X | — | X | — | X | X | — | X | — | X |
| கல்யாணி | X | — | X | — | X | — | X | X | — | X | — | X | X |
| சங்கராபரணம் | X | — | X | — | X | X | — | X | — | X | — | X | X |
| கரகரப்பிரியா | X | — | X | X | — | X | — | X | — | X | X | — | X |
| அரிகாம்போதி | X | — | X | — | X | X | — | X | — | X | X | — | X |

ஆ. ச. — ஆதார சட்சமம்
சு. ரி. — சுத்த ரிடபம்
ச. ரி. — சதுசுருதி ரிடபம்
சா. கா. — சாதாரண காந்தாரம்

| | |
|---|---|
| அ . கா . | அந்தர காந்தாரம் |
| சு . ம . | சுத்தமத்திமம் |
| பி . ம . | பிரதிமத்திமம் |
| பஞ்சமம் | பஞ்சமம் |
| சு . தை . | சுத்ததைவதம் |
| ச. தை. | சதுசுருதிதைவதம் |
| கை. நி. | கைசிகி நிடாதம் |
| கா. நி. | காகலி நிடாதம் |
| மே. ச. | மேல் சட்சமம் |

மேலும் 10 இராகங்களின் விபரங்களைக் கர்த்தா இராகங்கள் பகுதி "II" இல் காண்க.

### இசைக்கலைச் சொற்கள் பகுதி 1

**அங்கம் :**

இது உறுப்புகள் அல்லது பகுதிகள் எனப் பொருள்படும் சொல்லாகும். பாடல்களில் வரும் பல்லவி, அனுபல்லவி, சரணம், சிட்டாஸ்வரம் போன்றவற்றையும், தாளங்களில் வரும் லகு, துருதம், அனுத்துருதம் போன்ற பகுதிகளையும் குறிக்கும்.

**அசலசுரம் :**

வேறு ஸ்தானங்களையோ, கமகங்களையோ பெருமல் சுத்தமாக ஒலிக்கும் சட்சம, பஞ்சம சுரங்களைக் குறிக்கும். இச்சுரங்களையே அவிக்குருதி சுரங்களென்றும் கூறுவர்.

**அட்சரம் :**

தாளத்தில் அடங்கி நிற்கும் எண்ணிக்கைகள் அட்சரம் எனப்படும்.

**அவிக்குருதி சுரம் :**

அசல சுரங்களாகிய சட்சம, பஞ்சமத்தைக் குறிக்கும்.

**அனுகத நாதம் :**

இயற்கையினுல் உண்டாகின்ற நாதம், இந்நாதத்தை யோகிகளால் மட்டுமே உணர முடியும் என்பர்.

**அவரோகணம் :**

ஒரு இராகத்திற்கு இருக்க வேண்டிய சுரங்களை இறங்கு நிரைப்படுத்திக் காண்பித்தல்.
உ-ம். : ச் த ப க ரி ச (மோகனம்).

**அஷ்டகம் :**

மேல் சட்சமத்துடன் கூடிய எட்டுச் சுரங்களையும் குறிக்கும் பதம், இப்பதத்தை அட்டகம் என்றும் சொல்வர்

**ஆகதநாதம் :**

மனிதனின் முயற்சியினுல் உண்டாக்கப்படும் நாதம்.

**ஆரோசணம் :**

ஒரு இராகத்திற்கு இருக்க வேண்டிய சுரங்களை ஏறு நிரைப்படுத்திக் காண்பித்தல்
உ-ம், : ச ரி க ப த ச் (மோகனம்)

**ஆவர்த்தனம் :**

ஒரு தாளத்திற்கு உரிய அங்கங்களை ஒருமுறை முழுமையாகச் செய்து முடிக்க ஒரு ஆவர்த்தனம் எனப்படும். இப்பதத்தை "ஆவர்த்தம்" என்றும் சொல்வர்.

**இசைப் பாட்டு :**

இராகத்துடனோ, அல்லது இராக தாளத்துடனோ கூடிய பாடல்கள் இசைப் பாட்டுகள் எனப்படும்.

**உத்தராங்கம் :**

ச ரி க ம ப த நி ச் என்னும் எட்டுச் சுரங்களில் பிற்பகுதியாகிய ப த நி ச் என்னும் நான்கு சுரங்களையும், வர்ணபாடத்தில் சரணம், சிட்டாஸ்வரம் ஆகிய பிற்பகுதிகளையும் குறிக்கும்.

**உபாங்கம் :**

உப உறுப்புக்கள் (உப + அங்கம்) என்னும் பொருளில் உண்டான சொல்லாகும். ஆரோகண அவரோகணத்தில் எட்டுச் சுரங்களும் பூரணமாக இல்லாமல் சுரங்கள் குறைவாக உள்ளதைக் குறிக்கும். (பாஷாங்க, வக்கிரக இராகங்கள் அல்லாத) மோகனம் பூபாளம், சுத்தசாவேரி, மத்தியமாவதி போன்ற இராகங்களைக் குறிக்கும்.

**ஔடவம் :**

ஆரோகணத்திலோ, அல்லது அவரோகணத்திலோ, அல்லது இரண்டிலுமோ மேல்ச் சட்சமத்துடன் ஆறு சுரங்கள் உள்ளனவற்றைக் குறிக்கும்.

**கிரியை :**

கிரியை என்னும் சொல் செய்கை என்பதைக் குறிக்கும். லகு, துருதம் ஆகிய அங்கங்களின் கிரியைகள் முறையே அடித்து எண்ணுதல், அடித்துப் புரட்டுதல் ஆகியன வாகும்.

**கோமள சுரம் :**

ஒவ்வொரு சுரத்திற்குமுரிய இரண்டு ஸ்தானங்களில் முதலாவது ஸ்தானங்களாகிய சு-ரி, சா-கா, சு-ம, சு-தை, கை-நி ஆகிய ஸ்தானங்களைக் குறிக்கும்.

**சங்கீதம் :**

இராக தாளத்துடன் கூடிய, அல்லது இராகத்துடனுவது கூடிய இலக்கண வரம்புக்கமைந்த இசைப் பாட்டுக்களே சங்கீதம் எனப்படும்.

**சாட்வம் :**

ஆரோகணத்திலோ, அல்லது அவரோகணத்திலோ, அல்லது இரண்டிலுமோ மேல்ச் சட்சமத்துடன் ஏழு சுரங்களைக் கொண்டனவற்றைக் குறிக்கும்.

**சுருதி :**

நாதத்தை அளவிட்டுக் கையாளுதல் சுருதி எனப்படும். இது இசைக்கு ஆதாரமாய் அமைந்துள்ளது. இதனை ''அலகு'' என்றும் உரைப்பர். இது சட்சம, பஞ்சமங்களின் செயற்கையினல் உண்டுபண்ணப்படுகின்றது.

**தாது :**

இது பாட்டின் இசை அமைப்பைக் காட்டும் சுரத்தை மட்டும் குறிக்கும்.

**நடை :**

இது அட்சரம் ஒவ்வொன்றிலும் அடங்கி நிற்கும் மாத்திரைகளாகிய எண்களைக் குறிக்கும்.

**பண் :**

பழங்காலத்தில் இராகம் என்னும் சொல்லுக்குப் பதிலாகப் ''பண்'' என்னும் சொல் வழக்கில் இருந்து வந்தது. இடைக்காலத்தில் குறிப்பிட்ட, சில இராகங்களின் தொகுப்பிற்கு ''பண்'' என்னும் சொல் வழங்கி வந்தது தற்காலத்தில் ஒரு பண்ணிற்கு ஓர் இராகம் மட்டுமே வழங்கி வருகின்றது.

**பூர்வாங்கம் :**

சரிகமபதநிச் என்னும் எட்டுச் சுரங்களில் முதலில் வரும் ''சரிகம'' என்னும் நான்கு சுரங்களையும் குறிக்கும்.

**மாது :**

இது இசைப்பாடலில் வரும் பாடலை (சாகித்தியத்தை) மட்டும் குறிக்கும்.

**ஸப்தஸ்வரம் :**

''ஸப்த'' என்னும் சொல் ஏழு என்னும் எண்ணினைக் குறிக்கும். ஆகவே ச ரி க ம ப த நி என்னும் ஏழு சுரங்களையும் குறிக்கும்.

**ஷடாங்கம் :**

தாளத்தில் இடம்பெறும் லகு, துருதம், அனுத்ருதம், ஆகிய ஸப்தக்கிரியைகளுடன் நிஸப்தக்கிரியைகள் மூன்றுமாக மொத்தம் ஆறு கிரியைகளையும் குறிக்கும்.

**ஸாஹித்தியம் :**

உருப்படிகளில் இடம்பெறும் இசை அமைப்பாகிய ஸ்வரங்களை விட்டு பாடலை மட்டுங் குறிப்பதான சொல்லாகும், இலக்கியம் எனப்பொருள்படும்.

ஹெச்சுஸ்தாயி :

மெலிவு, சமம், வலிவு என்னும் நிலைகளில் மூன்ருவதான மேல் நிலையைக் குறிக்கும்.

சங்கீதம் எழுதப் பிரயோகிக்கப்படும் குறியீடுகள் :

, இவ்வடையாளம் (கமா) ஒரு அட்சர கால அளவைக் காட்டும். கீதமும் அதற்கு உட்பட்ட பாடங்களில் மட்டுமே ஒரு அட்சரகால அளவைக் காட்டும். அதற்கு மேற் பட்ட வர்ணம், கீர்த்தனை போன்ற பாடங்களில் ஒரு மாத்திரையைக் குறித்து நிற்கும்.

ா இவ்வடையாளம் (அரவு) இது மேலே காட்டிய ,இவ்வடையாளத்திற்குச் சம மானது. ஒரு சுரம் இரண்டு சுரத்தினுடைய கால அளவைக் காட்டி நெடிலாக நிற்க உதவுவதாகும்.

; இவ்வடையாளம் கீதங்களிலும், அதற்கு முந்திய பாடங்களிலும் இரண்டு அட்சர கால அளவையும், வர்ணம், கீர்த்தனை போன்ற பாடங்களில் இரண்டு மாத்திரைகளையும் காட்டி நிற்கும்.

| இவ்வடையாளம் தாள அங்கங்களில் வரும்போது 'லகு' எனப்படும். அதாவது அடித்து எண்ணுதலைக் காட்டும். இது பாடங்களின் இடையில் வரும்போது தாளத்தின் உட்பிரிவுகளையுங் காட்டும்.

|| இது தாள ஆவர்த்தன முடிவைக் காட்டும்.

═══ இந்த அடையாளம் சுரத்தின் மேலோ, கீழோ வருமாயின் மூன்ருங் காலத்தைக் காட்டும்.

——— இவ்வடையாளம் சுரத்தின் கீழோ, அல்லது மேலோ வருமாயின் இரண்டாங் காலத்தைக் குறிக்கும்.

~~~~~~ இவ்வடையாளம் கமகத்தைக் குறிக்கும். (அசைவைக் காட்டும்.)

O இது தாள அங்கங்களில் ஒன்ருன துருதத்தைக் குறிக்கும். இதன் கிரியை அடித்துப் புரட்டுதலாகும். இரண்டு அட்சரத்தைக் கொண்டது.

ᴗ இந்த அடையாளம் அனுத்துருதம் எனப்படும். இதன் கிரியை தட்டுதல் மட்டும் ஒரு அட்சரத்தைக் கொண்டது.

/ இவ்வடையாளம் ஏற்றச் சார்பைக் காட்டும். ஒரு சுரத்தில் இருந்து இடையே சில சுரங்களை விட்டு மேல் உள்ள சுரத்திற்கு இழுத்துப் பிடித்தல், அல்லது வாத் தியங்களில் வாசித்தல்.

\ இது இறக்கச் சார்பைக் காட்டும். ஒரு சுரத்தில் இருந்து, இடையே இருக்கும் சில சுரங்களை விட்டுக் கீழே உள்ள சுரத்தை இழுத்துப் பிடித்தல்.
~~~~~~

# திவ்விய நாமக்கீர்த்தனை

### தியாகராஜஸ்வாமிகள் பாடியவை

இராகம் : சங்கராபரணம் — 29ஆவது }
தாளம் : ஆதி — மேளகர்த்தா }

### பல்லவி

சா – ரி கா மா பா ; பா ; | தா , நி ச்ா நித | பா ; மாகா //
பா ஹி ரா மச் சந் த்ர பா லி த ஸு ரேந் த் ரா
மா தா பா ரீ கா பா மாசா | ரீ கா ரீ நீ | சா ; சா ; //
ப ர ம பா வ ன ஸ தா கு ண க ண ஸுந் த்ரா

### சரணம்

1. பா ; பா பா மா ; மா மா | கா ; கா கா | ரீ கா ரீ ; //
நீ . ர் த நீ ல மு னீந் த்ர ஹிரு த – யா .
பா ; தா பா மா ; பா மா | கா ; மா கா | ரீ கா ரீ ; //
நா . ர த ஸே வி த சா – ர ஸ நயன
(பா ஹிராம.)

### முதற் சரணம்போற் பாடவும்

2. ஸ்ரீ கரரூபஸ | தாகர வதன //
சோ க னி வாரண | ஸ-ந்தர ரதன // (பா ஹிராம)
3. நிர்மல ரூபா | நிந் தித மதன //
சர் மத சாக்லே | ஸார் ணவஸ ஸதன // (பா ஹிராம)
4. ராஜ ராஜ னுத | ராகவதி யாக //
ராஜ ஹிரு தாலய | ராக்ஷீத நா. க // (பா ஹிராம.)

### அலங்காரம் (அ)

இது அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படிகளில் மிக மேலான இடத்தைப் பெற்றுள்ளது. இது சுரஸ்தான உறுதிப்பாட்டையும், லய ஞான பலத்தையும் உண்டு பண்ணுவதுடன் சுரப்பிரத்தார முறைக்கும் வழிவகுக்கும். இப்பாடம் சுரங்களினல் அலங்கரிக்கப்பட்டமையால் அலங்காரம் எனப்பட்டது.

ஆரம்பப் பாடங்களாகிய சுரவரிசைகள், இரட்டைவரிசைகள், மேல் ஸ்தாயி வரிசைகளை அடுத்து அமைந்துள்ளது இப்பாடம். இவ்வலங்காரங்களை மூன்று காலங்களிலும், சரிக—ரிகம—கமப போன்ற அடுக்கு வரிசைகளை சதுஸ்ர நடையில் நன்கு பாடவும், வாத்தியக்காரர் வாத்தியங்களில் வாசிக்கவும் பயின்ற பின்னரே வர்ணம், கீர்த்தனை போன்ற பாடங்களைப் பயில முற்பட வேண்டும். வாய்ப்பாட்டு பயிலுபவர்கள் அலங்கார பாடங்களையோ, அல்லது அதற்கு முந்திய பாடங்களையோ கற்றுக் கொள்ளாமல் கேள்வி அறிவின் மூலமே வர்ணம், கீர்த்தனை போன்ற சில உருப்படிகளை ஓர் அளவேனும் பாட முடியும். ஆனுல் வாத்திய சங்கீதம் பயிலுவோர் அலங்காரம் வரையிமுள்ள பாடங்களை மூன்ருங் காலப் பயிற்சியின்றி வர்ண பாடங்களையோ, அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களையோ கற்றுத் தேர்ச்சி அடைய முடியாது.

அலங்காரத்தைப் பாடம் செய்யத் தொடங்கும் முன் அது எவ்வாறு அமைந்துள்ளது என்பதை நன்கு உணர்ந்து கொண்டும், வழி வகைகளை அறிந்து கொண்டும் பாடம் செய்யத் தொடங்குவோமானால் பாடம் செய்ய வேண்டுமென்னும் சுவை எமக்கிராது. அலங்காரங்களைப் பாடம் செய்வதுதான் நோக்கமெனக் கொள்ளாது சுரஸ்தானங்களைச் சுத்தமாகப் பிடிக்கவும், லயஞான பலத்தைப் பெறவும் முயற்சிக்க வேண்டும்

இசை உலகில் விசேடமாக இசை கற்பவர்களிடத்தில் ''சாதகம்'' செய்வதென்னும் சொற்றொடரை அதிகமாகக் கேட்கிறோம். சாதகம் என்னும் இச்சொல் வாய்ப்பாக, சார்பாக, அனுசரணையாக என ஒரு கருத்தையே குறித்து நிற்கும். இசை கற்கும் மாணவர்களுக்கு இசையைச் சார்பாக் கொள்வதற்கு—சாதகமாக்கிக் கொள்வதற்கு உரிய பயிற்சியினையே சாதகம் செய்தல் என்கிறோம். இப்பயிற்சிக்கென அமைக்கப்பட்ட பாடங்களை நன்கு சாதகம் செய்வதன் மூலமே இசைத்துறையில் மேம்பாடடைய முடியும். இப்பாடங்களுள் சுரவரிசைகள் தொடக்கம் அலங்காரம் வரையிமுள்ள பாடங்கள் அடங்கிய போதிலும் மேலதிகமான சில வரிசைகளும் இங்கே தரப்பட்டுள்ளன. இவைகளைப் பிறிதொரு பாடத்திற் காண்போம்.

இலகுவான அலங்காரங்கள் நான்கு இங்கே தரப்பட்டுள்ளன. ஏனைய மட்டிய துருவ, அடதாள அலங்காரங்களைப் பிறிதொரு பாடத்திற் பார்ப்போம்.


## அம்புக்குறி மூலம் உணர்தல்

**சதுஸ்ரஜாதி ஏகதாளம்:** இது லகுவில் நான்கு அட்சரங்களை மட்டுங் கொண்டுள்ளது. ஆரம்பத்திற் பாடும் அலங்காரங்களை அங்க வேறுபாடுகளைக் காண்பிக்காமல் சர்வலகுமுறையில் காண்பித்துப் பழகிக் கொள்ளலாம்.

சமகால அளவில் தட்டுதலை மட்டுங் கொண்டது. "சர்வலகு'' எனப்படும்.

இவ்வலங்காரத்தின் அமைப்பைப் பின்வருமாறு எண்கள் மூலமோ, அல்லது கோடுகள் மூலமோ உணர்ந்து கொள்ளலாம்.


| 1 | | 1 |
|---|---|---|
| ச ரி க ம | // | 1 2 3 4 |
| ரி க ம ப | // | 2 3 4 5 |
| க ம ப த | // | 3 4 5 6 |
| ம ப த நி | // | 4 5 6 7 |
| ப த நி ச் | // | 5 6 7 8 |
| ச் நி த ப | // | 8 7 6 5 |
| நி த ப ம | // | 7 6 5 4 |
| த ப ம க | // | 6 5 4 3 |
| ப ம க ரி | // | 5 4 3 2 |
| ம க ரி ச | // | 4 3 2 1 |



## சதுஸ்ரஜாதி ரூபகதாளம்

| 0 — | 1 | O — | 1 |
|---|---|---|---|
| ச ரி | ச ரி க ம // | 1 2 | 1 2 3 4 // |
| ரி க | ரி க ம ப // | 2 3 | 2 3 4 5 // |
| க ம | க ம ப த // | 3 4 | 3 4 5 6 // |
| ம ப | ம ப த நி // | 4 5 | 4 5 6 7 // |
| ப த | ப த நி ச் // | 5 6 | 5 6 7 8 // |
| ச் நி | ச் நி த ப // | 8 7 | 8 7 6 5 // |
| நி த | நி த ப ம // | 7 6 | 7 6 5 4 // |
| த ப | த ப ம க // | 6 5 | 6 5 4 3 // |
| ப ம | ப ம க ரி // | 5 4 | 5 4 3 2 // |
| ம க | ம க ரி ச // | 4 3 | 4 3 2 1 // |

ச ரி க ம ப த நி ச்



## திஸ்ரஜாதி திரிபுடை தாளம்

| 1 | O | O | 1 | O | O |
|---|---|---|---|---|---|
| சரிக | சரி | கம // | 1 2 3 | 1 2 | 3 4 // |
